# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் - 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 2306/SCIC/2023**

திரு. வெ.நாகராஜன் — புகார்தாரர்
வெறியம்பட்டி
வீரணம்பட்டி மற்றும் அஞ்சல்
மேலப்பகுதி கிராமம்
கடவூர் வட்டம் - 621 301
கரூர் மாவட்டம்.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
திருச்சி.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 05.11.2022 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 13.12.2022 |
| 3 | மனுதாரரின் புகார் மனு | 19.01.2023 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.10.2024 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 19.11.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் (சங்கங்கள்), பதிவாளர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், திருச்சி அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “திருச்சி மாவட்ட சங்கங்களின் பதிவாளர் எல்லைக்குட்பட்ட அலுவலகத்தில் 19/11/2000-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராளிக் கவுண்டர் சங்கம் (சங்க பதிவு எண்.278/2000) எண்ணாக பதியப்பட்ட சங்கத்தின் 2000-ம் ஆண்டு முதல் இன்றைய தேதிய வரை

சங்க நிர்வாக குழுவால் இதுவரை புதுப்பிக்க சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பார்வையிட்டு தேவையான ஆவணங்களை சான்றளிக்கப்பட்ட ஆவண நகல்களாக பெற்றிட தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் பிரிவு 2(j)-ன் கீழ் ஆவன செய்திட வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" எனக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில், பொதுத் தகவல் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி திரு.சதீஷ்குமார், உதவியாளர், மாவட்டப் பதிவாளர் அலுவலகம், திருச்சி அவர்கள் ஆஜராகி மனுதாரரிடமிருந்து 29/05/2025 தேதியிட்டு பெற்ற கடிதத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். அக்கடிதத்தில், தனக்கு "பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.2969/ஆ3/2025 நாள் 17/04/2025 வாயிலாக முழுமையான தகவல்களை பொதுத் தகவல் அலுவலர் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்டேன். எனவே, மேன்மைமிகு தமிழ்நாடு தகவல் ஆணையம் வழக்கு எண்.CP/2306/SCIC/2023-ன் மீது மேல்நடவடிக்கை வேண்டாம் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். எனவே, இப்புகார் மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 2306/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
திருச்சி.

**புகார்தாரர்**

திரு. வெ.நாகராஜன்
வெறியம்பட்டி
வீரணம்பட்டி மற்றும் அஞ்சல்
மேலப்பகுதி கிராமம்
கடவூர் வட்டம் - 621 301
கரூர் மாவட்டம்.

RG/PC